TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075858

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2023 ஆண்டு | FIR No.: 1 /2023 மு.த.அ. எண் | Date: 04.01.2023 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 04.01.2023 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் : 14.00 hrs — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.01.2023 — Time : நேரம் 1500 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I — Time : நேரம் 1500 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 3 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி உதவி மின் பொறியாளர் அலுவலகம், திருப்பாபுலியூர், கடலூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J.செல்வகுமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P.ஜெயபால்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ----
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ----
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் எலக்ட்ரிஷியன்
(g) Address : முகவரி நெ.56A, மாரியம்மன் கோயில் தெரு, கம்மியம்பேட்டை, கடலூர் மாநகராட்சி,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

சசிக்குமார், உதவி மின் பொறியாளர், திருப்பாபுலியூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 04.01.2023 ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாநகராட்சி, கம்மியம்பேட்டை, நெ.56A, மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த P.ஜெயபால் மகன் J.செல்வகுமார் என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : 04.01.2023 கடலூர் அனுப்புநர் J. செல்வகுமார் (49), த/பெ P.ஜெயபால், நெ.56A, மாரியம்மன் கோயில் தெரு, கம்மியம்பேட்டை, கடலூர் மாநகராட்சி. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர் மாவட்டம். வணக்கம், நான் கடலூர் மாநகராட்சி, கம்மியம்பேட்டை, மாரியம்மன் கோயில் தெருவில்

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................. Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் அளிப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
J.Selv.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
அ.தி. [signature] 4/1/23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04-01-2023 at 17.00 hrs.

Name: பெயர் அ. திருவேங்கடம்
Rank: நிலை ............ No. எண் ......
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கடலூர்.

குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ITI எலக்ட்ரிக்கல் படித்துள்ளேன். தற்போது எலக்ட்ரிகல் காண்ட்ராக்ட் வேலை எடுத்து செய்து வருகிறேன். லட்சுமிநாராயணன் என்பவரின் மனைவி திவ்யா என்பவருக்கு சொந்தமாக கடலூர், திருப்பாபுலியூர், சன்னதித் தெருவில் கதவு எண்.42 என்ற முகவரியில் இரண்டு கடைகளும், கடலூர், திருப்பாபுலியூர், திருவரசன்பிள்ளை தோட்டம், நெ.679/1 என்ற முகவரியில் இருண்டு வீடுகளும் உள்ளன. அந்த வீடுகள் மற்றும் கடைகளை நான் எலக்ட்ரிக்கல் வேலை செய்வதற்கு காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்து வருகிறேன். அந்த இரண்டு வீடுகள் மற்றும் இரண்டு கடைகளுக்கு தனித்தனியே சர்வீஸ் கணெக்ஷன் என நான்கு உள்ளன. அந்த நான்கு சர்வீஸ் கணெக்ஷன்களும் இதுவரை அவரது பாட்டி சகுந்தலா பெயரில் உள்ளது. EB சர்வீஸ் பெயர் மாற்றுவது சம்மந்தமாக நான் திருப்பாபுலியூர் உதயா நெட் செண்டருக்கு 02.01.2023 ஆம் தேதி சென்று ஆன்லைனில் திவ்யா சார்பாக மனு செய்து அதற்குரிய படிவங்களை பதிவிறக்கம் செய்து திவ்யா மற்றும் அவரது பாட்டியிடமும் கையொப்பம் வாங்கி வைத்துக்கொண்டேன். அதற்குண்டான கட்டணத்தை அதே நெட் சென்டரில் இன்று (04.01.2023) மதியம், ஒரு பெயர் மாற்றத்திற்கு தலா ரூ.708 வீதம் பணம் கட்டினேன். அதற்கு பின்னர் நான் பெயர் மாற்றம் தொடர்பாக விண்ணபத்தை கடலூர், திருப்பாபுலியூரில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு இன்று மதியம் 2.00 மணி வாக்கில் போயிருந்தேன். அப்போது அந்த அலுவலகத்தில் உதவி மின் பொறியாளர் சசிகுமார் என்பவர் அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் நான் எடுத்து சென்ற நான்கு விண்ணப்பத்தை கொடுத்தேன். அவர் அதை வாங்கி படித்து பார்த்துவிட்டு ஒவ்வொரு விண்ணப்பத்திற்கு தலா ரூ.2,500/- வீதம் மொத்தம் நான்கு பெயர் மாற்றத்திற்கு ரூ.10,000/- கேட்டார். நான் நெட் செண்டரில் கட்டணத்தை கட்டிவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு அவர் அந்த காசு வாரியத்துக்கு போயிடும், நான் கேட்கரது எனக்கு சேரவேண்டிய காசு என சொன்னார். நான் அவரிடம் தெரியாத தனமாக இவ்வளவு செலவாகும் என தெரியாம காண்ட்ராக்ட் எடுத்துட்டேன். எப்படியாவது குறைத்து முடித்து கொடுங்கன்னு கேட்டேன். அதற்கு அப்புறம் அவர் ஒரு சர்வீஸ்க்கு ரூ.2,000/- வீதம் 4 சர்வீஸ்க்கு மொத்தம் ரூ.8,000/- கேட்டார். அதுக்கு அப்புறம் நான் பணம் இப்ப என்னிடம் இல்லை, பணத்தை ரெடி பண்ணிக்கிட்டுவறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு நான் யோசனை செய்து பார்த்ததில் லஞ்சம் கொடுத்து திவ்யா பெயருக்கு EB சர்வீஸ் பெயர் மாற்றம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. அதனால் நான், உதவி மின் பொறியாளர் சசிகுமார் கேட்ட

லஞ்சப்பணம் ரூ.8,000/-த்தை கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட உதவி மின் பொறியாளர் சசிகுமார் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்........) (செல்வகுமார்).

சமார்ப்பிக்கப்பட்டது, மேற்படி வாதியின் புகார் மனுவை நான் இன்று **04.01.2023** ஆம் தேதி மாலை **15.00** மணிக்கு பெற்றேன். மேலும் வாதியின் புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டின் உண்மை தன்மை பற்றி விசாரித்ததில் குற்றச்சாட்டு உண்மையென தெரியவருகிறது. மேலும் வாதியின் புகாரில் கூறப்பட்ட குற்ற அலுவலரின் நடத்தை பற்றி விசாரிக்க, குற்றச்சாட்டில் முகாந்திரம் இருப்பது தெரியவருகிறது. எனவே, வாதியின் புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பதினால், மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உத்திரவுபடி நான் இன்று **04.01.2023** ஆம் தேதி மாலை **16.00** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 01/2023, U/s 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் உத்திரவுபடி வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைக்காக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.P.அன்பழகன் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

அ. [signature]
4/1/23
[அ. திருவேங்கடம்]